# அகநானூற்றில் வணக்கச் செய்திகள்

**வி.கலாவதி**
உதவிப் பயிற்றுநர்
அழகப்பா பல்கலைக்கழகம்
காரைக்குடி.
முனைவர் பட்ட பகுதி-நேர ஆய்வாளர்
குந்தவை நாச்சியார் அரசு மகளிர் கலைக் கல்லூரி, தஞ்சாவூர்.
(பாரதிதாசன் பல்கலைக்கழக ஆளுகைக்கு உட்பட்டது)
பதிவு எண் (BDU2020632778717)

**நெறியாளர் முனைவர்.ஜோ.அருணாதேவி அவர்கள்.**
உதவிப் பேராசிரியர், தமிழ்த் துறை,
குந்தவை நாச்சியார் அரசு மகளிர் கலைக் கல்லூரி, தஞ்சாவூர்.
(பாரதிதாசன் பல்கலைக்கழக ஆளுகைக்கு உட்பட்டது)

**ஆய்வுச்சுருக்கம்**

அகநானூற்றில் காணும் வணக்கச் செய்திகள், சங்ககால மக்கள் எவற்றையெல்லாம் வணங்கினார்கள், எதற்காக வணங்கினார்கள், அவர்கள் வணங்கிய முறைகள் எவ்வாறு இருந்தது, வணங்கும் மரபினால் அவர்களது வாழ்க்கை முறையில் பண்பாட்டு விழுமியங்களான அன்பு,அமைதி,பணிவு,ஒற்றுமை, மகிழ்ச்சி போன்றவை எவ்விதம் அமைந்திருந்தது. நமது முன்னோர்கள் கூறிய பண்பாட்டு விழுமியங்களை பின்பற்றி நாமும் நம் எதிர்கால சந்ததியினரும் நமது வாழ்க்கை முறையினை சிறப்புடன் அமைத்துக் கொள்ள செவ்வியல் இலக்கியங்களில் ஒன்றான எவ்விதம் நமக்கு துணைபுரிகின்றது என்பன பற்றியெல்லாம் இக்கட்டுரை எடுத்தியம்புகிறது.

**குறியீட்டு சொற்கள**

செவ்வியல் இலக்கியங்கள், அகநானூறு, வணங்குதல், பண்பாட்டு விழுமியங்கள்

**ABSTRACT**

Worship messages found in the nineteenth century, what the people of the Sangam worshiped, what they worshiped for, how they worshiped, and how the cultural values of love, peace, humility, unity, and happiness were situated in their way of life by the tradition of worship.

This article highlights how Akananuru, one of the classic literatures, helps us and our future generations to better shape our way of life by following the cultural values stated by our ancestors.

**KEY WORDS:** Sevviyal Ilakkiyangal, Agananuru, Panpattu Vizhumiyangal, Vananguthal

## முன்னுரை

**ஊழி யாவரும் உணரா**
**ஆழி முதல்வநின் பேணுதும் தொழுதும்**

**(பரிபாடல் (பா-2 பா.வ.14-15).**

தமிழின் செவ்வியல் இலக்கியங்கள்; பண்பாட்டுக் களஞ்சியங்களாக திகழ்கின்றன என்பது தமிழ் கூறும் நல்லுலகு அறிந்து அனுபவித்து இன்புற்று எடுத்துரைத்த ஒன்றே என்றால் அது மிகையல்ல!. அவற்றில் அகநானூறு ஓர் அகப்பொருள் சார்ந்த நூலானாலும் அதில், புறப்பொருள் சார்ந்த கருத்துக்களும் நிறைந்து காணப்படுகின்றன.

அவற்றில் பண்பாட்டுக் கூறுகளுள் ஒன்றான வணங்குதல்(பணிதல்) சார்ந்த கருத்துக்களும் விரவிக் காணப்படுகின்றன. மேலும் வணங்கும் தன்மை எங்குள்ளதோ அங்கே நிச்சயம் பணிவும் இருக்கும். ஆக பணிவினை உள்ளடக்கியதே வணங்குதல் ஆகும். இதனைக் கருத்திற்கொண்டே> **“அகநானூற்றில் வணக்கச் செய்திகள்”** எனும் பொருண்மையினைப் பற்றி; இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளது.

**ஆய்வுமுறை**

அகநானூறு எனும் தொகைநூலில் காணலாகும் வணக்கச் செய்திகள் பற்றி நுணுகி விளக்கமாக ஆராயும் ஆய்வுமுறையான விளக்கமுறை ஆய்வு இக்கட்டுரையில் பின்பற்றப்பட்டுள்ளது.

**ஆய்வுநூல் பற்றிய குறிப்புகள்**

**அட்டவணை 1**

| நூல்கள் | உரையாசிரியர் | காலம் |
|---|---|---|
| அகநானூறு மூலமும் உரையும் | வ.த.இராமசுப்பிரமணியம் தமிழக அரசு விருது பெற்ற நூலாசிரியர் | ஜூலை 2009 |

**அகநானூறு**

சங்க இலக்கியங்களின் வகைமையில் முதல் தொகுப்பான எட்டுத்தொகை நூல்களில் அடங்கியுள்ள ஓர் அகநூலே அகநானூறு ஆகும். இந்நூல் கி.பி.3ஆம் நூற்றாண்டு தொகுக்கப்பட்டது. இந்நூலைத் தொகுப்பித்தவர் பாண்டிய மன்னன் உக்கிரப் பெருவழுதி ஆவார்.தொகுத்தவர் மதுரை உப்பூரிகுடிக்கிழார் மகனார் உருத்திரஞ்சன்மனார் ஆவார். இந்நூலுக்கு பாயிரம் பாடியவர் இடையள நாட்டு மணக்குடியான் பால் வண்ண தேவனான வில்லவதரையன் ஆவார். இந்நூலுக்கு கடவுள் வாழ்த்துப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார் ஆவார். இந்நூல் நானூறு பாடல்களின் தொகுப்பாகும். இந்நூலில் உள்ள பாடல்கள் அனைத்தும் பல்வேறு காலங்களில் வாழ்ந்த பல்வேறு புலவர்களால் பாடப்பட்டது. இந்நூல் அகம் என்றும் நெடுந்தொகை என்றும் சிறப்பிக்கப்படுகிறது.

**அட்டவணை 2**

**ஆய்வுக்குட்படுத்தப்பட்ட நூலில் காணும் வணக்கச் செய்திகள்**

| நூல் | வணக்கச் செய்திகள் |
|---|---|
| அகநானூறு | 25 |

**வணக்கச்செய்திகள்**

**இறைவனை வணங்குதல்**

சிவபெருமான் நீலமணி போலும் கண்டத்தினை உடையவாய்த் திகழ, இவ்வுலகமானது அப்பெருமான் திருவடி நிழலை வணங்கியே இன்று தழைக்கிறது. என்பதனை,

**யாழ்கெழு மணி மிடற்று அந்தணன்**

**தாஇல் தாள்நிழல் தவிர்ந்தன்றால் உலகே.**

**(அகநானூறு (பா.வ.14-15).**

- என்ற அகநானூற்று கடவுள் வாழ்த்துப் பாடல் நமக்கு உணர்த்துகிறது.

**அகர முதல எழுத்தெல்லாம் ஆதி**
**பகவன் முதற்றே உலகு.**

**(குறள்-க.வாழ்த்து -1)**

**உலகம் உவப்ப வலன் ஏர்புதிரிதரு**
**பலர் புகழ் ------**

**(திருமுருகாற்றுப்படை)**

**ஊலகம் யாவையும் தாமுள வாக்கலும்**
**நிலைபெறுத்தலும் நீக்கலும் நீங்கலா------**

**(கம்பராமாயணம் - க.வாழ்த்து)**

தமிழ் இலக்கியங்கள், காப்பியங்கள்,நீதி நூல்கள், அறநூல்கள் என்பன போன்ற அனைத்து வகைமை நூல்களும் முதலில் இறைவனை வணங்குவதையே மரபாகக் கொண்டுள்ளது என்பதனை, மேற்கண்ட பாடல்கள் வழி நம்மால் அறியமுடிகிறது.

சங்ககால இலக்கியங்கள் மட்டுமல்லாமல்இ சங்கம் மருவிய கால இலக்கியங்களிலும் இக்கால இலக்கியங்களிலும் வணங்கும் மரபுகள் தொன்றுதொட்டு காணப்படுகிறது.

பாரதியார்இ புல் பூண்டுகள் முதல் மக்கள் வரை அனைவரும் தம் செயலால் துன்பம் நீங்கி இன்புற்றிருக்க வேண்டும் அதற்கு அருள் புரிவாயாக என்று விநாயகபெருமானை வணங்கியுள்ளார். இதனைஇ

**மண்மீதுள்ள மக்கள் பறவைகள்**
**விலங்குகள் பூச்சிகள் புற்பூண்டு மரங்கள்**
**யாவுமென் வினையால் இடும்பைத் தீர்ந்தே**
**இன்பமுற்று அன்புடன் இணங்கி வாழ்ந்திடவேஇ**

**செய்தல் வேண்டும்.**
**(விநாயகர் நான்மணிமாலை-32)**

இப்பாடல் வரிகள் மூலம் பாரதியாரது இறைபற்றும்இ இயற்கை உயிர்களின் மீதுள்ள பற்றும் நமக்குப் புலனாகிறது.

**தமிழ்த்தாய் வணக்கம்**

கவிஞர் நாரா.நாச்சியப்பன் அவர்கள் தமிழ்த்தாயை வணங்கித்தொழுது வாழ்த்தியிருக்கிறார். இதனை,

**நல்ல தமிழ்நூல் நடையெழுத நீயெனக்கு**
**வல்லமைதா வென்று வணங்கினேன் - தொல்**
**பலகாலந் தொட்டுப் பருவங் குலையா**
**திலகுதமிழ்த் தாயே இனிது**
**என்றும் உனது புகழ் யான்பேச வேண்டுமென**
**நின்று தொழுகின்றேன் நீயருள்வாய்-**
**(தமிழ் வளர்கிறது)**

மேற்கண்ட பாடல் வழி நம்மால் அறியமுடிகிறது.

**கடவுளுக்கு காணிக்கை செலுத்தி வணங்கும் மரபுகள்**

அன்பின் ஐந்திணைக்குரிய நிலப்பகுதிகளில் அந்நில மக்களால் விளைவிக்கப்படும் விளைபொருள்களைக் கொண்டு கடவுளுக்கு காணிக்கை செலுத்தி வணங்கும் மரபு சங்ககாலத்தில் இருந்ததனை கீழ்வரும் பாடல்களால் அறியமுடிகிறது.

**குறிஞ்சி நில மக்கள் மலைக்கிழவனான வேலனை வணங்குதல்**

அன்னையானவள், தலைவியின் மெலிவுக்கான காரணத்தை அறிதல் வேண்டி, நிவேதனப்பொருளாக செந்திணையை நீரோடு கலந்து தூவி, வேலன் வெறியாடும் களத்தினை மலர்களால் அலங்கரித்து, ஆட்டுக்குட்டியினைப் பலியிட்டு முருகபெருமானை வணங்கிய மரபு காணப்பட்டது என்பதனை,

**கமழ் இதழ் அலரி தாஅய் வேலன்**
**வெறி அயர் வியன்களம் கடுக்கும்**
**(அ.நா(பா-182-பா.வ.16-17)**

**முருகு என உணர்ந்து முகமன் கூறி,**
**உருவச் செந்தினை நீரொடு தூஉய்,**
**நெடுவேள் பரவும் அன்னை அன்னோ!**
**(அ.நா(பா.272-பா.வ.13-15)**

என்ற அகநானூற்றுப் பாடல்கள் நமக்கு உணர்த்துகின்றன.

மலையில் விளையும் பொருள்களான மாங்கனி, பலாச்சுளை, தேன், கள் போன்றவற்றை மூங்கிலின் குழாயினுள் அடைத்து, பின்பு அதனை, மலையுச்சி தெய்வத்திற்கு காணிக்கை செலுத்திய பின்பே அந்த காணிக்கைப் பொருளை குறவர் இன மக்கள் உண்டு மகிழ்ந்த மரபு காணப்பட்டது. இதனை,

**------------------------------ முன்றில்,**
**தேன்தேர் சுவையத்திரள் அரைமா அத்து,**
**கோடைக்கு ஊழ்த்த கமழ்நறுந் தீம்கனி,**
**புயிர் புறப்பலவின் எதிர்ச்சுளை அளைஇ,**
**இறாலொடு கலந்த வண்டுமூசு அரியல்,**
**நெடுங்கண் ஆடுஅமைப் பழுநி கடுந்திறல்,**
**பாப்புக் கடுப்பு அன்ன தோப்பி வான்கோட்டுக்**
**கடவுள் ஓங்கு வரைக்கு ஓக்கிக் குறவர்**
**முறித்தழை மகளிர் மடுப்ப**
**(அ.நா(பா.348-பா.வ.1-9)**

என்ற பாடல் வழி அறியமுடிகிறது

**நெய்தல் நில மக்கள்**
**பனித்துறை (நீர்த்துறை) தெய்வத்தை வழிபடல்**

நெய்தல் நில மக்கள் தங்களது நெய்தல் துறையின் தெய்வமான வருணபகவானை தனது சுற்றத்தோடு சேர்ந்து வாழ்த்தி வணங்கிய மரபினை அகநானூற்று பாடல்கள் எடுத்தியம்புகின்றன. இதனை,

**அணங்குடைப் பனித்துறை கைதொழுது ஏத்தி,**
**யாயும் ஆயமொடு அயரும்.**
**(அகநானூறு(பா-240-பா.வ.8-9)**
என்ற பாடல் நமக்கு உணர்த்துகிறது.

நெய்தல் நிலப் பெண்கள் தழையாடையை உடுத்தி உயர்ந்த அல்குலையுடையவர்களாய்க் கொற்கைத் துறையில் விளங்கும் முத்துக்களோடு வலம்புரிச் சங்குகளையும் காணிக்கையாகப் படைத்து துறையின்கண் உள்ள தெய்வத்தினை வழிபடும் மரபுகள் காணப்பட்டன என்பதனை,

**புகழ்மலி சிறப்பின் கொற்கை முன்துறை**
**அவிர்கதிர் முத்தமொடு வலம்புரி சொரிந்து,**
**தழை அணிப் பொலிந்த கோடுஏந்து அல்குல்,**
**பழையர் மகளிர் பனித்துறை பரவ.**
**(அ.நா-பா.201-பா.வ.4-7)**
என்ற பாடல் வழி அறியமுடிகிறது.

**மனைவாழ் தெய்வத்தினை வணங்குதல்**

தங்கள் பெண்ணிற்கு மணநாள் விரைவில் அமைய வேண்டும் என்று கருதி தம் மனையில் வாழும் தெய்வத்திற்கு படையல் இட்டு வணங்கும் மரபினை கொண்டிருந்தனர். என்பதனை,

**வல்லே வருக! வரைந்த நாள் என**
**நல் இறை மெல் விரல் கூப்பி,**
**இல்உறை கடவுட்கு ஆக்குதும் பலியே.**
**(அ.நா.பா.283-பா.வ.16.18)**
இப்பாடல் நமக்கு உணர்த்துகிறது.

**திருமணத்தின் முன்பு கடவுளை வணங்குதல்**

சங்ககாலத்தில் திருமணம் செய்யும் முன்பு அந்நன்னாளில், மாளிகையில் மணவினை செய்து இறைவனை வணங்கிய பின்பே, மணமுரசு முழங்க மங்கல மகளிர் தலைவிக்கு மணநீராட்டி ஒப்பனை செய்து திருமணம் செய்தனர்.இதனை,

**கடிநகர் புனைந்து கடவுட் பேணிப்**
**படுமனை முழவொடு.**
**(அ.நா.136-பா.வ.6.7)**
என்ற அகநானூற்றுப் பாடல்வழி நம்மால் அறியமுடிகிறது.

**இயற்கையை இறைவனாக வணங்குதல்**

**மலையை வணங்குதல்**

தன் பிரப்பங்கோலை கையில் ஏந்திய பாணர்கள், வைகறைப் பொழுதில் கடைவாயிலில் நின்று, தன் குன்றத்தை பாடி வணங்கும் மரபு சங்க கால மக்களிடம் காணப்பட்டது. இதனை,

**யாம இரவின் நெடுங்கடை நின்று,**
**தேம் முதிர் சிமையக் குன்றம் பாடும்,**

**துண்கோல் அகவுநர் வேண்டின் ---**

**(அ.நா.208-பா.வ.1.3)**

மேலும் பரிபாடலிலும் திருமாலிருஞ்சோலை, திருப்பரங்குன்றத்தினை வணங்கிய மரபும் காணப்பட்டது.இதனை,

**அரிதில் பெறு துறக்கம் மால் இருங்குன்றம்**
**எளிதில் பெறல் உரிமை ஏத்தகம் சிலம்ப**
**(பரிபாடல்.பா.15-பா.வ.14.15)**

**மிக ஏற்றுதும் மலர் ஊட்டுதும் அவி**
**தோற்றுதும் பாணி எழுதும் இணைமுருகன்**
**தாள் தொழு தண்பரங் குன்று.**
**(பரிபாடல்.பா.8-பா.வ.80.82)**

என்ற பாடல்கள் வழி நம்மால் அறியமுடிகிறது.

**இளம்பெண்கள் மூன்றாம் பிறையை வணங்குதல்**

சங்ககாலத்தில் இளம்பெண்கள் மாலை வேளையில் பிறைச்சந்திரனை வணங்கித் தொழுதனர். இதனை,

**ஒள்இழை மகளிர் உயர்பிறை தொழூஉம்,**
**புல்லென் மாலை யாம் இவண் ஒழிய**
**(அ.நா.பா.239-பா.வ.9-10)**

**ஞாயிறை வணங்குதல்**

கதிரவனை வணங்கும் மரபு சங்ககாலத்திலிருந்தே காணப்படுகிறது என்பதனை,

**தயங்குதிரைப் பெருங்கடல் உலகுதொழத் தோன்றி,**
**வயங்கு கதிர் விரிந்த உருகெழு மண்டிலம்.**
**(அ.நா.பா.263-பா.வ.1-2)**

என்ற பாடல் வழி அறியமுடிகிறது. மேலும் சிலப்பதிகாரத்திலும் இளங்கோவடிகள் அவர்கள் இயற்கையின் வரமான ஞாயிறு, நிலவு, மழை போன்றவற்றை வாழ்த்திப் பாடியுள்ளார்.இதனை,

**ஞாயிறு போற்றுதும்! ஞாயிறு**
**போற்றுதும்!-**
**காவிரி நாடன் திகிரிபோல்,**
**பொற்கோட்டு**
**மேரு வலம் திரிதலான்.**
**(சிலப்பதிகாரம்-1-பா.வ.4-6)**

என்ற பாடல் நமக்கு உணர்த்துகிறது.

**கடம்பமரம்,யானையை வணங்குதல்**

கடம்பமரத்தில் கொடியைக் கட்டி, மாலையணிவித்து செந்தூக்கு முதலியவற்றுள் ஒன்றினைப் பொருந்தியவாறு பாடி வாத்தியங்களைக் கொண்டு குறிஞ்சிநிலக் கடவுளான முருகவேளைப் பாடித்துதித்தும், கடப்பமரத்தினையும், யானையையும் வாழ்த்தி வணங்கிய மரபினை,

**கடம்புகொடி யாத்துக் கண்ணி சூட்டி,**
**வேறுபல் குரல ஒருதூக்கு இன்இயம்,**
**காடுகெழு நெடுவேள் பாடுகொளைக்கு ஏற்ப,**
**அணங்கு அயர் வியன்களம் பொலிய ----**
**(அ.நா.பா.382- பா.வ.3.6)**

**உருகெழு சிறப்பின் முருகு மனைத் தரீஇ**
**கடம்பும் களிறும் பாடி ------**
**(அ.நா.பா.256 – பா.வ.7.8)**
என்ற பாடல்கள் வழி அறியமுடிகிறது.

**இசையை இறைவனாக எண்ணி வணங்குதல்**

பாணர்கள் இசைக்கும் யாழிசையானது, இறைவனை வேண்டும்பொழுது, எவ்விதம் நம் துன்பம் தீருமோ, அதுபோல செவ்வழிப்பண்ணினைக் கேட்கும் பொழுது இருந்ததாகவும் இசையும் இறைவனும் ஒன்று என்று கருதிப் போற்றிய தன்மையும் அகநானூற்றில் காணப்படுகிறது. இதனை,

**செவ்வழி நல்யாழ் இசையினென் டையென**
**கடவுள் வாழ்த்திப் பையுள் மெய்ந்நிறுத்து.**
**(அ.நா.பா.14 – பா.வ.15.16)**
என்ற பாடல் மூலம் உணரமுடிகிறது.

**பல்லியின் நன்நிமித்தத்தை வணங்குதல்**

பல்லி எழுப்பும் ஒலியை நன்நிமித்தமாகக் கருதி தொழுத மரபுகள் அகநானூற்றில் மட்டுமல்லாமல் சங்கஇலக்கியங்கள் பலவற்றிலும் காணப்படுகின்றன. இதனை,

**உள்ளூதொறு படூஉம் பல்லிப்**
**புள்ளூத்தொழுது உறைவி செவிமுதலானே.**
**(அ.நா.பா.351-பா.வ.16-17)**

**மையல் கொண்ட மதன் அழி இருக்கையள்**
**பகுவாய்ப் பல்லி படுதொறும் பரவி,**
**நல்ல கூறு என நடுங்கி,**
**புல்னெ மாலையொடு பெரும்கொல் தானே.**
**(அ.நா.289- பா.வ.14.17)**
என்ற பாடல்கள் வழி அறியமுடிகிறது.

**நடுகல்லிற்கு பலியிட்டு வணங்குதல்**.

போரில் இறந்த வீரர்களின் ஆண்மைக்கு அடையாளமாக நடுகல் இட்டும், அந்நடுகல்லில் அவ்வீரர்களின் பெயர்களைப் பொறித்தும், நீராட்டி, மஞ்சள் பூசியும், ஆத்தி நாரினால் சிவந்த கரந்தைப் பூக்களைத் தொகுத்துக் கட்டி அக்கற்களுக்குச் சூட்டியும்,மயில்தோகையைச் சூட்டியும், வேலும் கேடயமும் அக்கல்லின் முன்னே ஊன்றியும் சங்ககால மக்கள் வழிபட்டனர். இதனை,

**வில்ஏர் வாழ்க்கை விழுத்தொடை மறவர்**

**வல்ஆண் பதுக்கைக் கடவுட் பேண்மார்,**
**நடுகல் பீலி சூட்டித் துடிப்படுத்துத்**
**தோப்பிக் கள்ளொடு துருஉப் பலிகொடுக்கும்**
**போக்கு ---------- ------ -----**
**(அ.நா.பா.35-பா.வ.6.10)**

**நட்ட போலும் நடாஅ நெடுங்கல்**
**அகல் இடம் குயின்ற பல்பெயர் மண்ணி,**
**நறுவினர் மஞ்சள் ஈர்ம்புறம் பொலிய**
**அம்பு கொண்டு அறுத்த ஆர்நார் உரிவையின்**
**செம்பூங் கரந்தை புனைந்த கண்ணி**
**(அ.நா.269-பா.வ.7;.11)**

மேலும் செம்மறி ஆட்டை பலியிட்டும், கள்ளைப் படைத்தும், ஒலிக்கருவிகளை(துடி) இசைத்தும், நடுகல்லினை வழிபட்டனர். இதனை,

**நல் அமர்க் கடந்த நாணுடை மறவர்,**
**பெயரும் பீடும் எழுதி அதர்தொறும்**
**பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல்,**
**(அ.நா.பா.67-பா.வ.8.10)**

என்ற பாடல்கள் வழி நம்மால் உணரமுடிகிறது.

**பகை மன்னன் திரைகொடுத்து வணங்குதல்**

போரில் தோற்ற பகை மன்னர்கள் ஆபரணங்களோடு யானைகளையும், பொன்னால் செய்த பாவைகளையும்,வயிரங்களையும் திரைப்பொருள்களாகக் கொடுத்து வெற்றிகண்ட மன்னனை **பணிந்து வணங்கி** நிற்க, வெற்றி பெற்ற வேந்தன் போரை நிறுத்தி நாடு திரும்புதலும், பகைவரிடம் பெற்ற திரைபொருள்களை பாணர்கள், கூத்தர்கள், விறலியர்கள் மற்றும் வீரர்களுக்கும் வழங்கிய மரபினை அகநானூற்றுப் பாடல்கள் நமக்கு நன்கு உணர்த்துகிறது. இதனை,

**நன்கலம் களிற்றொடு நண்ணார் ஏத்தி,**
**வந்து திறை கொடுத்து வணங்கினர் வழிமொழிந்து**
**(அ.நா.124-பா.வ.1.2)**

**---- ---- ---- ஒன்னார்**
**பணி நிறைதந்த பாடுசால் நன்கலம்**
**பொன்செய் பாவை வயிரமொடு ----**
**(அ.நா.127-பா.வ.6.8)**

என்ற பாடல்கள் வழி நம்மால் அறியமுடிகிறது.

**தலைவன் தலைவியை வணங்கிப் பணிதல்**

தலைவன் தலைவியிடம் கொண்ட அன்பின் காரணமாக அவளிடம் காதல் கொள்ளும்பொழுதும், அவள் ஊடல் கொள்ளும்பொழுதும், பணிந்து வணங்கும் மரபு

அகநானூறு மட்டுமல்லாது அனைத்து சங்க இலக்கிய நூல்களுமே நயம்பட எடுத்தியம்புகின்றன என்றால் அது மிகையல்ல! இதனை,

**இன்புற புணர்ந்தும் இளிவரப் பணிந்தும்**

**(அ.நா.பா.330-பா.வ.3)**

**யாமும் காதலம் அவற்கு எனச் சாஅய்,**
**சிறுபுறம் கவையினனாக உறுபெயல்,**
**தண்துளிக்கு எற்ற பல்உழு செஞ்செய்,**
**மண் போல் நெகிழ்ந்து, அவற் கலுழ்ந்தே**
**நெஞ்சு -------- ------**

**(அ.நா.26-பா.வ.22.26.)**

தலைவன் தலைவியிடம் கொண்ட அன்பினால் தாழ்ந்து பணிந்து தலைவியின் முதுகுப்புறத்தினை அணைத்துக் கொண்டான். அந்நிலையில் தலைவியின் நெஞ்சமானது, மழையில் நனைந்த மண் இளகுவது போல நெகிழ்ந்ததாக மேற்கண்ட பாடல்கள் நமக்கு உணர்த்துகின்றன.

**பாணன் தலைவியை வணங்குதல்**

சங்க இலக்கியங்களில்,பாணர்கள் தலைவன் தலைவியிடத்தே நிகழும் பிரிவினையும் ஊடலையும் தீர்த்து வைக்கும் தலைவனின் நல்ல நண்பர்களாகவே காணப்படுகின்றனர். அதன்பொருட்டு பாணர்கள் தலைவனுக்குத் தூதாக தலைவியிடத்தில் போய் தலைவியை வணங்கி நின்று பேசும் மரபினைப் பின்பற்றினர்.என்பதனை,

**மம்மர் நெஞ்சினோன் தொழுது நின்றதுவே.**

**(அ.நா.56-பா.வ.16)**

என்ற அகநானூற்றுப் பாடல் நமக்கு உணர்த்துகிறது.

**முடிவுரை**

அகநானூறு, சங்ககால மக்களின் வாழ்வியல் முறைகளையும், அவர்கள் பின்பற்றிய பழக்கவழக்கங்களையும் தெளிவுபட எடுத்தியம்பியுள்ளது என்றால் அது மிகையல்ல! அம்மக்கள் பின்பற்றிய விழுமியங்களில் மிக முக்கிய ஒன்றான பணிந்து வணங்கும் முறையால் அவர்கள் வாழ்வு கட்டமைக்கப்பட்டிருந்ததையும், அவர்கள் சுற்றத்தாருடன் இணைந்து மகிழ்வுடன் வாழ்ந்ததற்கு இவ்விழுமியம் வழிவகை செய்தது என்பதையும் நம்மால் அறிந்துகொள்ள முடிகிறது. சங்ககால மக்கள் பின்பற்றிய வாழ்வு முறைகளை இன்றும் நம்மக்கள் பின்பற்றுகிறார்கள் என்பது உண்மையே! இருப்பினும், இக்கால சூழலில் அவசரகதியில் வாழும் வாழ்க்கைமுறையால் அப்பண்பாடுகளுக்கான முக்கியத்துவம் குறைந்து வருவதும் நாம் அனைவரும் அறிந்த கசப்பான உண்மையாகும். எனவே நம் எதிர்கால சந்ததியினருக்கு நம் பண்பாட்டு விழுமியங்களில் முக்கிய ஒன்றான வணங்குதல் பற்றி இவ்விலக்கியங்கள் வழி எடுத்துரைத்து அவர்களை வழிநடத்துவது நம் அனைவரின் கடமையாகும்.

ISSN: 2320-4842
Vol-17 No. 04 October-December 2023

**துணைநூற்பட்டியல்**



| **வ.எண்** | **நூல்கள்** | உரையாசிரியர் |
|---|---|---|
| 1. | ஆய்வியல் நெறிமுறைகள் | முனைவர்.கு.வெ.பாலசுப்பிரமணியன்இ 17ம் பதிப்பு-2012இ அனுராதா பப்ளிகேசன்ஸ்இ கும்பகோணம்.-- |
| 2. | பரிபாடல் மூலமும் உரையும் | முனைவர்.ஞா.மாணிக்கவாசகன்இ முதற்பதிப்பு மே.2009இ உமா பதிப்பகம்இ சென்னை. |
| 3. | பாரதியார் கவிதைகள் | உரையாசிரியர் கவிஞர் பத்மதேவன் |
| 4. | தமிழ் வளர்கிறது | நாரா .நாச்சியப்பன்- செல்வி பதிப்பகம்-காரைக்குடி |
| 5. | இணையதள முகவரி | http://www.tamilvu.org.<br>**கூகுள் தேடுபொறி (நிழற்படங்கள் )** |



**பின்னிணைப்புகள்**

**இறை வணக்கம்**





**இயற்கையை வணங்குதல்** பெற்றோரை வணங்குதல்




ISSN: 2320-4842
Vol-17 No. 04 October-December 2023

நடுகல் வழிபாடு





வேலன் வெறியாட்டு

கதிரவன் வழிபாடு



